# அறிவிப்புகள்

1. மக்கள் பணியில் மகத்தான சேவை ஆற்றும் வருவாய்த் துறைக்கு வரும் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், மனுக்கள் கொடுக்க வரும் பொதுமக்களுக்கு மின் விசிறி, மின் விளக்கு, இருக்கைகளுடன் கூடிய காத்திருக்கும் கூடம், மனுதாரரின் மனு குறித்த விவரம் பற்றி அறிய உதவும் மின்னணு தகவல் தெரிவிக்கும் பலகை, குளிர்ந்த குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, மாற்றுத் திறனாளிகள் எளிதில் செல்ல சாய்தள வசதி ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் தலா ரூ.10 இலட்சம் வீதம் ஒரு மாவட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வழங்க கருணை உள்ளம் கொண்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** உத்தரவிட்டுள்ளார்கள்.
2. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பழுதடைந்துள்ள தளவாடங்களை சீர்செய்வதற்கும், புதியதாக வாங்குவதற்கும் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
3. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** வட்டாட்சியர் ஜீப்புகளுக்கு வழங்கப்படும் மாத டீசல் ஒதுக்கீடு 140 லிட்டரிலிருந்து 160 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.46.13 இலட்சமாகும்.
4. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் பயன்படுத்தும் பழுதடைந்துள்ள 14 சீருந்துகள் மற்றும் 24 ஜீப்புகளை மாற்றி அவற்றிற்கு பதிலாக புதிய சீருந்துகள் மற்றும் ஜீப்புகள் ரூ.208 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

5. பழமையான வட்டாட்சியர் அலுவலகங்களான

(1) அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத் தலைமையிடமான ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகம்;

(2) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு மற்றும் மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகங்கள்;

(3) திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டாட்சியர் அலுவலகம்;

(4) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம்;

ஆகியவற்றிற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** புதிய கட்டடங்கள் மொத்தம் ரூ.**1084.25** இலட்சம் செலவில் கட்டப்படும்.

6. வாடகை கட்டடத்தில் இயங்கி வரும்

(1) கரூர் மாவட்டம், கடவூர் வட்டாட்சியர் அலுவலகம்;

(2) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டாட்சியர் அலுவலகம்;

(3) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகம்;

ஆகியவற்றிற்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 702.19** இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

7. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** பெரம்பலூர் நகராட்சியில் ஜி.ப்பி.எஸ். மற்றும் டோட்டல் ஸ்டேஷன் போன்ற நவீனக் கருவிகளைக் கொண்டு ரூ.**20** இலட்சம் செலவில் நிலஅளவைப் பணி மேற்கொள்ளப்படும்.

8. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நிலஅளவர் மற்றும் வரைவாளர் பதவிகளுக்கான விரும்பத்தக்க கல்வித் தகுதியாக நிலஅளவை இரண்டு வருட பட்டயப் படிப்பு நிர்ணயிக்கப்படும். இந்த நோக்கத்திற்காக சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள நிலஅளவை மற்றும் ஆராய்ச்சி மையத்திலும் (C-STAR), தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் உள்ள நிலஅளவைப் பயிற்சி நிலையத்திலும் 2 வருட நிலஅளவை பட்டயப் படிப்புக்கான (Diploma in Surveying) வகுப்புகள் துவங்கப்படும். இதற்கு சுமார் ரூ.4 கோடி செலவாகும்.
9. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நிலவரித்திட்டப் பணி முடிவுற்ற பின்னர், சென்னை மாவட்டத்தில் நத்தம் நிலங்கள் உள்ள 31 கிராமங்களில் சுமார் 15,000 நில உரிமையாளர்களுக்கு பட்டாக்கள் வழங்கும் பணி துவங்கப்படும்.
10. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில், குடும்பத்தில் விவசாயத்தொழிலில் ஈடுபட்டுள்ள உறுப்பினர் இறந்த பின்னரும் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் இத்திட்டத்தில் அனைத்து பயன்களையும் பெற வழிவகை செய்யப்படும். இதன்மூலம் கல்வி மற்றும் திருமண உதவித்தொகையை அவரைச் சார்ந்த உறுப்பினர்கள் இப்பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
11. மேலும், காசநோய், புற்று நோய் மற்றும் பிற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக எந்த ஒரு பணியும் செய்ய இயலாத சூழ்நிலையிலுள்ள விவசாய உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1000/– நோய் குணமாகும் வரை உள்ள சிகிச்சை காலத்தில் வழங்க மனிதநேயம் கொண்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** உத்தரவிட்டுள்ளார்கள்.

12. தீர்வு காண முடியாத குத்தகை பாக்கி தொடர்பான வழக்குகளை தீர்வு காண்பதற்காக, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** புதியதாக நான்கு வருவாய் நீதிமன்றங்கள் ஆண்டொன்றிற்கு ரூ.60 இலட்சம் செலவில் லால்குடி, மன்னார்குடி, திருநெல்வேலி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தொடங்கப்படும்.

13. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நடப்பு ஆண்டில் தகுதிவாய்ந்த நபர்களுக்கு கீழ்க்கண்ட இடங்களிலுள்ள உபரி நிலங்கள் சரியாக உட்பிரிவு செய்யப்பட்டு வழங்கப்படும்:—

| | |
|---|---|
| தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் | **1017.47 ஏக்கர்** |
| தூத்துக்குடி, திருநெல்வேலி | **1545.29 ஏக்கர்** |
| திருச்சிராப்பள்ளி | **295.00 ஏக்கர்** |
| ஈரோடு | **86.00 ஏக்கர்** |
| மொத்தம் | **2943.76 ஏக்கர்** |

14. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (1999—ஆம் ஆண்டு இச்சட்டம் நீக்கறவு செய்யப்பட்டது)—ன் கீழ் கையகப்படுத்தப்பட்ட 85,107 கிரவுண்டு மிகைவெற்று நிலங்களை பாதுகாக்கவும், சிறந்த நிருவாகத்திற்காகவும், நகர்ப்புற நிலவரி வசூல் குறித்து கண்காணிக்கவும் ஒரு முழுமையான விவரங்கள் அடங்கிய தகவல் தொகுப்பு (Data Base) உருவாக்கும் நோக்குடன் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** நகர்ப்புற நிலவரி இயக்குநர் அலுவலகம் மற்றும் 15 களப்பணி அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படும்.

15. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,** தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், **1978**–ன் கீழ் கையகப்படுத்தப்பட்டு காலியாகவுள்ள **10,564** கிரவுண்டு மதிப்புமிக்க நிலங்களை வேலியிட்டு பாதுகாத்து பொது நோக்கத்திற்காக எதிர்காலங்களில் பயன்படுத்தப்படும்.

16. பல்வேறு திட்டங்களை கண்காணிக்கவும், முறையாக ஆய்வு செய்யவும், ஆண்டொன்றுக்கு **36.74** இலட்சம் ரூபாய் செலவில் நில நிருவாக ஆணையர் அலுவலகத்தில் தணிக்கை பிரிவு ஒன்றினை உருவாக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** உத்தரவிட்டுள்ளார்கள்.

**கே.ஏ. செங்கோட்டையன்**
**வருவாய்த் துறை அமைச்சர்**